**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 341/2025**

**Dated: 06.07.2026**

**Deposition of Witnesses for PW - 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முனியசாமி | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Thiru.Vinothkumar, Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023.

**எதிரி ஆஜர். இருதரப்பும் வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நானும், மு.நி.கா.2641 திரு.கணேஷ்குமார், சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வகுமார் ஆகியோர் 15.03.2023-ம் தேதி காலை 8.15 மணிக்கு எதிரியிடமிருந்து அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.அசோக் அவர்கள் கஞ்சா மற்றும் பணம் மற்றும் Hero Honda இருசக்கர வாகனம், சிப்லாக் கவர், பாலித்தீன் கவர் ஆகியவற்றை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் கையொப்பம் செய்துள்ளோம். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அத்தாட்சியிலுள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **அத்தாட்சி அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **ஒப்புதல்**

**வாக்குமூலத்தில் கண்டுள்ள எனது கையொப்பம் மட்டும் அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்க விவரம் சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மேட்டுகொட்டியாகுளம் ரயில்வே கேட் என்பது ஜனநடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சார்பாளர் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரித்து வாக்குமூலங்கள் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். தனிநபர்கள் சாட்சியம் சொல்ல முன்வரவில்லை. சாட்சிகள் சொல்ல முன்வராத நபர்களின் பெயர் விலாசம் பற்றிய விவரங்களை குறிப்பிட்டு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது சம்பந்தமாக சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். சாட்சி சொல்ல வர மறுத்த நபர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எதுவும் சார்பு ஆய்வாளர் எடுத்தாரா என்றால் அது பற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். அத்தாட்சியில் SHO முத்திரை வைக்கப்படவில்லை என்றால் சரிதான். கஞ்சா மாதிரிகள் நீதித்துறை நடுவர் முன்பாக எடுக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி, ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை யார் எழுதினார் என்றால் அத்தாட்சியை சார்பு ஆய்வாளர் சொல்லசொல்ல எழுதினேன். ஒப்புதல் வாக்குமூலத்தை கருப்பசாமி சொன்னதை சார்பு ஆய்வாளர் எடுத்து சொல்லசொல்ல அதை நான் எழுதினேன். அத்தாட்சியை நான் தான் எழுதினேன் என்று சொல்லி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் எதிரியை திரேக பரிசோதனை செய்தாரா என்றால் சோதனை செய்தார். சோதனை சம்மத கடிதத்தில் எதிரிக்குள்ள உரிமையை NDPS சட்ட

விதிமுறைகளின்படி முறையாக எடுத்து சொல்லி ஒப்புதல் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த ரகசிய தகவலும் கிடைக்கவில்லை என்றும் நாங்கள் ரைடுக்கு செல்லவில்லை என்றும் எதிரி என் முன்பாக ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும் அதனால் தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிநபர் சாட்சிகள் எவரும் சாட்சியாக இருக்கவில்லை என்றும் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் எதிரிக்கும் வழக்கு சொத்திற்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் வைத்து எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் காவ ல் நிலையத்தில் வைத்து தயார் செய்து மேல் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**
**C.C. No: 341/2025**
**Dated: 06.07.2026**
**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.செல்வகுமார்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரி ஆஜர்.இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 15.03.2023-ம் தேதி காலையில் நான் அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அசோக் அவர்களுடன் நானும் தாலுகா காவல்நிலையத்தில் பணிபுரியும் த.கா.முனியசாமி மற்றும் முதல்நிலை காவலர் கணேஷ் குமார் ஆகியோர் புகையிலை, கஞ்சா போன்ற தடை செய்யப்பட்ட பொருட்கள் சம்பந்தமாக தேவையான உபகரணங்களுடன் நிலையத்திலிருந்து புறப்பட்டு ரோந்து அலுவலாக சென்று மேட்டுத்தொட்டியாகுளம் ரயில்வே கேட் அருகே காலை 8.00 மணிக்கு வாகன தணிக்கை செய்த போது மேற்படி ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி

வந்த TN67 F7636 Hero Honda இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஆஜர் எதிரியும், வாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்த மற்றொருவரும் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை பார்த்ததும் அங்கு இருந்து தப்பி செல்ல முயற்சித்தவர்களை சார்பு ஆய்வாளர் தலைமையில் சுற்றி வளைத்து பிடித்து இருவரையும் பிடித்து விசாரித்தபோது அவர்கள் முன்னுக்குபின் முரணாக பேசியதால் சார்பு ஆய்வாளர் அவர்களிடம் உங்கள் மீது சந்தேகம் உள்ளது. அதனால் உங்களை நீதிபதியிடமோ, பதிவு பெற்ற அதிகாரி முன்னோ ஆஜர் செய்வது சம்பந்தமாக எடுத்து கூறியபோது அதற்கு எதிரிகள் சார்பு ஆய்வாளரிடம் தாங்களே சோதனை செய்யலாம் என சம்மதம் தெரிவித்தன் பேரில் சோதனை சம்மத கடிதம் தாயார் செய்து அதில் எதிரியிடம் கையெழுத்து பெற்று சார்பு ஆய்வாளர் ஆஜர் எதிரியை விசாரித்த போது அவர்களின் பெயர் கருப்பசாமி என்றும், இன்னொருவர் பெரியசாமி என்றும், செம்பட்டி கிராமம் என்றும் தனக்கு வயது 39 என்றும் வாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்தவர் பெயர் துரைப்பாண்டிகனி என்றும் தகப்பனார் பெயர் பெரியசாமி என்றும் செம்பட்டி கிராமம் என்றும் தனக்கு வயது 17 என்றும் தெரிவித்தார்கள். ஆஜர் எதிரியை சார்பு ஆய்வாளர் சோதனை செய்தபோது இடுப்பில் கையிலியின் மடுப்பிற்குள் நீலநிற பாலீதின் கவர் பொட்டலத்தை எடுத்து சார்பு ஆய்வாளரிடம் ஆஜர் செய்தார். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் அவர்கள் கேட்ட போது மூல வியாதிக்கான சித்த வைத்திய மருந்து என்று தெரிவித்தார்கள். அந்த பொட்டலத்தை பிரித்து பார்த்த போது அதிலிருந்து கஞ்சா நெடியுடன் கூடிய இலை, பூ, மொட்டு ஆகியவை காணப்பட்டது. மேலும் அந்த பொட்டலத்தில் சில ஜீப்லாக் பிளாஸ்டிக் எம்ப்டி கவர்களும் இருந்தது. இது சம்பந்தமாக எதிரியிடம் கேட்டபோது எதிரி தானாக

முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதில் ஆஜர் எதிரி தானும் 18 வயது நிரம்பாத துரைப்பாண்டிகனி என்பவரும் சேர்ந்து கஞ்சாவை வாங்கி வந்து விற்பதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் பதிவு செய்து எதிரிகளிடமும் சாட்சிகளாகிய எங்களிடமும் கையொப்பம் பெற்று சார்பு ஆய்வாளரும் கையொப்பம் செய்தார். மேலும் கஞ்சா விற்பனை செய்ததாக ஆஜர் எதிரி எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.23850/- ஆஜர் செய்தார். மேற்படி கஞ்சாவை எடை போட்டு பார்த்த போது 1.200 கி.கி இருந்தது. அதில் தலா 50கிராம் வீதம் இரண்டு பொட்டலங்களை தனித்தனியாக பிரித்து அதில் ஒரு பொட்டலம் S1 மற்றொரு பொட்டலம் S2 என எழுதி அதில் SHO Seal வைத்து எதிரிகளும் சாட்சிகளாகிய நாங்களும் சார்பு ஆய்வாளரும் கையெழுத்து செய்தோம். மீதமிருந்த 1.100கி.கி கஞ்சாவை தனியாக காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி அதில் P1 என்ற குறியீடு செய்தோம். அதில் SHO Seal வைத்து எதிரிகளும் சாட்சிகளாகிய நாங்களும் சார்பு ஆய்வாளரும் கையெழுத்து செய்தோம். மேற்படி சொத்துக்களை தனிநபர் சாட்சி யாரும் வராததால் எங்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் கஞ்சா, பணம், பாலீதின் கவர் மற்றும் கஞ்சா விற்க பயன்படுத்திய இரு சக்கர வாகனம் TN67 F7636 Hero Honda இரு சக்கர வாகனத்தையும் அத்தாட்சியில் சார்பு ஆய்வாளர் எதிரியிடமிருந்து கைப்பற்றினார். அதற்கு நானும், முனியசாமியும் இவ்வழக்கின் எதிரியும், இளவர் எதிரியும் கையொப்பம் செய்தோம். அதன்பின்பு சார்பு ஆய்வாளர் எதிரிகளுடனும், தடய சொத்துக்களுடனும் காவல் நிலையம் வந்து இவ்வழக்கின் எதிரி பெயரில் நிலைய குற்ற எண் 60/2023 U/sec. 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். அதற்கு நானும் முனியசாமி மற்றும் முதல்நிலை காவலர்

கணேஷ்குமாரும் உதவியாக இருந்தோம். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்து என்னுடைய வாக்குமூலத்தை பதிவு செய்தார். பின்னர் காவல் ஆய்வாளரும் என்னை விசாரித்தார். நானும், மு.நி.கா.2641 திரு.கணேஷ்குமார், முனியசாமி ஆகியோர்கள் 15.03.2023-ம் தேதி காலை 8.15 மணிக்கு எதிரியிடமிருந்து அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.அசோக் அவர்கள் கஞ்சா மற்றும் பணம் மற்றும் Hero Honda இருசக்கர வாகனம், சிப்லாக் கவர், பாலித்தீன் கவர் ஆகியவற்றை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் கையொப்பம் செய்துள்ளோம். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அத்தாட்சியிலுள்ள 3-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சி அதசாஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 3-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள எனது கையொப்பம் மட்டும் அதசாஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்க விவரம் சொன்னேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மேட்டுகொட்டியாகுளம் ரயில்வே கேட் என்பது ஜனநடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சார்பாளர் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரித்து வாக்குமூலங்கள் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். தனிநபர்கள் சாட்சியம் சொல்ல முன்வரவில்லை. சாட்சிகள் சொல்ல முன்வராத நபர்களின் பெயர் விலாசம் பற்றிய விவரங்களை குறிப்பிட்டு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது சம்பந்தமாக சார்பு

ஆய்வாளருக்கு தான் தெரியும். சாட்சி சொல்ல வர மறுத்த நபர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எதுவும் சார்பு ஆய்வாளர் எடுத்தாரா என்றால் அது பற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். அத்தாட்சியில் SHO முத்திரை வைக்கப்படவில்லை என்றால் சரிதான். கஞ்சா மாதிரிகள் நீதித்துறை நடுவர் முன்பாக எடுக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி, ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை யார் எழுதினார் என்றால் அத்தாட்சியை சார்பு ஆய்வாளர் சொல்லசொல்ல எழுதினேன். ஒப்புதல் வாக்குமூலத்தை கருப்பசாமி சொன்னதை சார்பு ஆய்வாளர் எடுத்து சொல்லசொல்ல அதை நான் எழுதினேன். அத்தாட்சியை நான் தான் எழுதினேன் என்று சொல்லி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் எதிரியை திரேக பரிசோதனை செய்தாரா என்றால் சோதனை செய்தார். சோதனை சம்மத கடிதத்தில் எதிரிக்குள்ள உரிமையை NDPS சட்ட விதிமுறைகளின்படி முறையாக எடுத்து சொல்லி ஒப்புதல் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த ரகசிய தகவலும் கிடைக்கவில்லை என்றும் நாங்கள் ரைடுக்கு செல்லவில்லை என்றும் எதிரி என் முன்பாக ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும் அதனால் தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிநபர் சாட்சிகள் எவரும் சாட்சியாக இருக்கவில்லை என்றும் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் எதிரிக்கும் வழக்கு சொத்திற்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் வைத்து எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் காவ ல் நிலையத்தில் வைத்து தயார் செய்து மேல் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.